# தமிழச்சி தங்கபாண்டியன்

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

## மாநிலங்கள் வாரியாக மாவட்ட வேளாண் வானிலை ஆய்வு நிலையங்கள் விவரம் தேவை

## தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி மக்களவையில் ஒன்றிய அரசுக்கு கேள்வி

புதுடெல்லி, மார்ச் - 23

மாவட்ட வேளாண் வானிலை ஆய்வு நிலையங்கள் (டி.ஏ.எம்.யு.) மாநிலங்கள் வாரியாக நிறுவப்பட்டுள்ளதா? அவ்வாறு நிறுவப்பட்டிருந்தால் அதைப்பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். இல்லையெனில் அதற்கான காரணங்களைத் தெரிவிக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கடந்த 22 ஆம் தேதி கேள்வி எழுப்பினார்.

**இது தொடர்பாக மக்களவையில் அவர் எழுப்பிய கேள்வி விவரம் வருமாறு:**

மாவட்ட வேளாண் வானிலை ஆய்வு நிலையங்கள் வேளாண் தொடர்பான வானிலை ஆலோசனைகளை மாவட்ட அளவிலும் மாவட்டத்திற்கு உட்பட்ட அளவிலும் சேகரித்து விவரம் தெரிவிக்கும் பொறுப்பைச் செய்து வருகின்றன. அத்தகைய பணியைச் செய்து வரும் மாவட்ட வேளாண் வானிலை ஆய்வு நிலையங்கள் மாநிலங்கள் வாரியாக நிறுவப்பட்டுள்ளனவா என்ற விவரத்தைத்

தெரிவிக்க வேண்டும். இல்லையெனில் அதற்கான காரணங்களையும் தெரிவிக்க வேண்டும்.

மாவட்ட வேளாண் ஆய்வு நிலையங்கள் ஒருங்கிணைந்த பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தால் அதற்கான விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் கர்நாடகம், சத்தீஸ்கர் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவிய கடுமையான வானிலை நிலவரத்தை முன்கூட்டியே அறிவதற்கு டாப்ளர் வானிலை ரேடார்கள் (டி.டபுள்யு.ஆர்) எத்தனை நிறுவப்பட்டுள்ளன என்பதைப் பற்றி ஒன்றிய அரசு விவரம் தெரிவிக்க வேண்டும். இல்லையெனில் அதற்கான காரணங்களையும் தெரிவிக்க வேண்டும் என்று தமிழச்சி தங்கபாண்டியன் கோரினார்.

**தமிழச்சி தங்கபாண்டியன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் அளித்த பதில் விவரம் வருமாறு:**

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வட்டார அளவில் வேளாண் வானிலை ஆலோசனை சேவைகளை (ஏஏஎஸ்) நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய வேளாண் ஆய்வுக் கவுன்சிலுடன் (ஐசிஏஆர்) இணைந்து வேளாண் அறிவியல் நிலையங்களை(கேவிகேஎஸ்) மாவட்ட வேளாண் வானிலை ஆய்வு நிலையம் (டிஏஎம்யு) ஏற்படுத்தியுள்ளது.

இந்திய வேளாண் ஆய்வுக் கவுன்சிலின் கீழ் வேளாண் அறிவியல் நிலையங்களில் இன்றைய தேதி வரையில் 199 மாவட்ட வேளாண் வானிலை ஆய்வு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வட்டார அளவிலும் மாவட்ட

அளவிலும் வானிலை முன்னறிவிப்பு விஷயங்களை விவசாயிகள் அனைவருக்கும் வாரம்தோறும் செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அறிவித்து வருகிறது. இதற்கான விஷயங்களை மாவட்ட வானிலை ஆய்வு நிலையங்கள் மாவட்ட அளவிலும் வட்டார அளவிலும் ஆலோசனைகளைப் பெற்று வானிலை முன்னறிவிப்புகளைத் தயார்செய்து சம்பந்தப்பட்ட மாவட்ட விவசாயிகளுக்குத் தெரிவித்து வருகிறது. இதன் மூலம் வேளாண் பணிகளை நாள்தோறும் வகுத்துக்கொண்டு அதற்கேற்றவாறு செயல்பட உதவிகரமாக உள்ளது.

**இந்திய வேளாண் ஆய்வுக் கவுன்சிலுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் விடுவிக்கப்பட்ட நிதி விவரம் வருமாறு.**

1. 2022-23 நிதியாண்டில் விடுவிக்கப்பட்ட தொகை ரூ. 31 கோடி
2. 2021-22 நிதியாண்டில் விடுவிக்கப்பட்ட தொகை ரூ.11 கோடி
3. 2020-21 நிதியாண்டில் விடுவிக்கப்பட்ட தொகை ரூ.4 கோடி
4. 2019-20 நிதியாண்டில் விடுவிக்கப்பட்ட தொகை ரூ.14.7 கோடி
5. 2018-19 நிதியாண்டில் விடுவிக்கப்பட்ட தொகை ரூ.7.60 கோடி

நமது நாட்டின் பல்வேறு பகுதிகளில் 37 டாப்ளர் வானிலை ரேடார்களை இந்திய வானிலை ஆய்வுத் துறை நிறுவியுள்ளது. இந்த ஐந்து ஆண்டுகளில் நமது நாட்டின் பல்வேறு பகுதிகளில் 11 டாப்ளர் வானிலை ரேடார்கள் நிறுவப்பட்டுள்ளன. தமிழகத்தைப் பொறுத்த வரையில் கடந்த 22-12-2021 அன்று சென்னையில் நிறுவப்பட்ட டாப்ளர் வானிலை ரேடாரும் இதில் அடங்கும்.

நமது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மாவட்ட வேளாண் வானிலை ஆய்வு நிலையங்கள் 199 இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. மாநிலங்கள் வாரியான விவரம்.

ஆந்திரம் 9, அருணாச்சலப் பிரதேசம் 2 அசாம் 8 பிகார் 13 சத்தீஸ்கர் 9 கோவா 1 குஜராத் 9 ஹரியானா 13 ஹிமாச்சலம் 3 ஜம்மு-காஷ்மீர் 4 ஜார்கண்ட் 6 கர்நாடகம் 12 கேரளம் 3 லட்சத்தீவு 1 மத்தியப்பிரதேசம் 14 மகாராஷ்டிரம் 11 மணிப்பூர் 1 மேகாலயம் 2 மிசோரம் 1 நாகாலாந்து 2 புது டெல்லி 1 ஒடிசா 8 புதுச்சேரி 1 பஞ்சாப் 5 ராஜஸ்தான் 10 சிக்கிம் 2 தமிழகம் 10 தெலங்கானா 8 திரிபுரா 1 உத்தரப்பிரதேசம் 20 உத்தரகண்ட் 2 மேற்குவங்கம் 7

இவற்றில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கடலூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், விருதுநகர், வேலூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், தர்மபுரி, சேலம், திருச்சி ஆகிய 10 இடங்கள் அடங்கும்.

*****